பெரம்பலூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் .
முன்னிலை திரு.ரெ.அறிவழகன் எம்.ஏ, பி.எட்., எம்.ஃபில் ,
மூ.மு.எண்.7191/அ1 /2021, நாள் .11.2021

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி – பெரம்பலூர் கல்வி மாவட்டம், வேப்பந்தட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.நீ.கார்த்திக் என்பாரின் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்தல் – குறித்து

பார்வை :
1. பெரம்பலூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 5556/அ1/2020 நாள் 18.09.2020
2. வேப்பந்தட்டை, அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியரின் கடித ந.க.எண். 267/2021 நாள் 20.10.2021

= = = = = = =

பெரம்பலூர் கல்வி மாவட்டம், வேப்பந்தட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.நீ.கார்த்திக் என்பாரின் இளநிலை உதவியாளர் பணியை 21.09.2020 மு.ப முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

அன்னார் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்து உத்தரவிடப்படுகிறது. தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூலில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்றும் அவ்வாறு தேர்ச்சி பெறவில்லையெனில் தகுதிகாண் பருவம் நீட்டிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இது சார்பான விவரம் சம்மந்தப்பட்ட இளநிலை உதவியாளர் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யுமாறு வேப்பந்தட்டை அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இத்துடன் சார்ந்த பணியாளரின் அசல் பணிப்பதிவேடு மற்றும் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதலை உடன் அனுப்பி வைக்குமாறு வேப்பந்தட்டை அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு : அசல் பணிப்பதிவேடு தொகுதி – 1
பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்

11/11/2021

முதன்மைக் கல்வி அலுவலர்,
பெரம்பலூர் .

9.11.21

பெறுநர் : சார்ந்த இளநிலை உதவியாளர் (தலைமையாசிரியர் வழியாக ) ,

நகல் : தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, வேப்பந்தட்டை
நகல் : கோப்பு .